# அலகு – 6

# இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி



## கற்றலின் நோக்கங்கள்

- இந்தியாவின் பாரம்பரிய கைவினைத் தொழில்கள் பற்றி அறிதல்
- இந்திய தொழிலகங்களின் வீழ்ச்சிக்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்தல்
- நவீன தொழிலகங்களின் தொடக்கத்தைப் புரிந்து கொள்ளுதல்
- ஐந்தாண்டு திட்டங்களின் நோக்கம் பற்றி தெரிந்து கொள்ளுதல்
- இந்தியாவில் தொழிற்துறை வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களைப் புரிந்து கொள்ளுதல்

KU19T

## அறிமுகம்

இந்திய தொழில்களின் வரலாறு மனிதகுல வரலாற்றிலிருந்தே தொடங்குகிறது. விவசாயமும் கைவினைப் பொருட்கள் கலந்த கலவையாகவே இந்திய பாரம்பரிய பொருளாதாரம் காணப்பட்டது. எட்வர்ட் பெயின்ஸ் என்பவர் "பருத்தி உற்பத்தியின் பிறப்பிடம் இந்தியா என்றும் அது உண்மையான வரலாற்று காலத்திற்கு முன்பே செழித்தோங்கி இருந்தது" என்றும் குறிப்பிடுகிறார். முகலாய பேரரசர் ஷாஜஹான் ஆட்சியின்போது இந்தியாவிற்கு வருகை தந்த பெர்னியர், இந்தியாவில் நம்பமுடியாத எண்ணிக்கையில் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டதைக் கண்டு வியப்படைந்தார். பிரெஞ்சு நாட்டு பயணி தவர்னியர் இந்தியாவில் உள்ள மயிலாசனம், பட்டு மற்றும் தங்கத்தினாலான தரைவிரிப்புகள், சிறிய அளவிலான சிற்ப வேலைப்பாடுகளையும் கண்டு வியப்படைந்தார்.

## இந்தியாவின் பாரம்பரிய கைவினைப் பொருட்கள்

இந்தியாவின் கைவினைப் பொருட்கள் ஒரு சிறந்த வரலாற்றைக் கொண்டுள்ளன. கைவினைப் பொருட்கள் இந்திய மக்களின் வாழ்க்கையில் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக இருந்தன. இயந்திரமயமாக்கப்பட்ட தொழிற்சாலைகள் வருவதற்கு முன்னர், இந்திய கிராமங்களில் விவசாயத்திற்கு அடுத்த நிலையில் கைவினைத் தொழில் பெரிய வேலை வாய்ப்பாக இருந்தது. நெசவு, மரவேலை, தந்தவேலை, மதிப்புமிக்க கற்களை வெட்டுதல், தோல், வாசனை மரங்களில் வேலைப்பாடுகள் செய்தல், உலோக வேலை மற்றும் நகைகள் செய்தல் ஆகிய பாரம்பரிய தொழில்களில் இந்தியா மிகவும் புகழ்பெற்று விளங்கியது. கிராமப்புற கைவினைஞர்களான பானைத் தயாரிப்பாளர்கள், நெசவாளர்கள், உலோக வேலை செய்வோர் ஆகியோர் வீட்டுப் பயன்பாட்டிற்கான பொருட்களையும்



கைவினைப் பொருட்கள்



6_History_Unit-6 Folder.indd 66 12/3/2022 6:54:56 PM